**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. சுகன்யா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முத்துப்பாண்டி** | **Calling** | : | **முதல்நிலை காவலர்** |
| **Village** | : | **கன்னிவாடி காவல்நிலையம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | |
| | | | **Dated** | : | **25.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

பட்டியல் சாட்சி 12 திருமதி. சுகன்யா ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 12 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது கன்னிவாடி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 06.08.2023 ம் தேதி நான் கன்னிவாடி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது பொறுப்பு ஆய்வாளர் உத்தரவிற்கு இணங்க திண்டுக்கல், அரசு மருத்துவமனைக்கு சென்று இந்த வழக்கில் காயம்பட்டு இறந்துபோன புகழ்நாதனின் பிரேதத்தினை, பிரேத பரிசோதனை செய்வதற்கான வேண்டுகோளை கொடுத்து பிரேதத்தினை அடையாளம் காட்டினேன். அது Ex. P10. அதன்பிறகு மறுநாள் 07.08.2023 ம் தேதி அன்று திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று 11.20 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டு 13.00 மணிக்கு முடிந்தது. அதன்பிறகு பிரேதத்தை

பெற்று உறவினர்களிடம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். அதன்பிறகு 14.08.2023ம் தேதி அன்று மேற்படி பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட, கண்ணாடி பாட்டில்களில் அடைக்கப்பட்ட உள்ளுறுப்புகளை மதுரை ஆய்வகத்தில் ஆய்வுக்காக ஒப்படைத்தேன். அதன்பிறகு 23.08.2023ம் தேதியில் கண்ணாடி பாட்டிலில் அடைக்கப்பட்ட இரத்தத்தை ஆத்தூர் குற்றவியல் நீதிமன்ற நடுவர் நீதிமன்றத்தில் படிவம் 91ல் ஒப்படைத்து, நீதிமன்ற உத்தரவின்பேரில் மதுரை தடய அறிவியல் துறைக்கு ஆய்வுக்கு அனுப்பினேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.26 12:17:50 +0530